செய்தி வெளியீடு எண்: 406 நாள் : 11.08.2016

# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை – 5

## செய்தி வெளியீடு

108 வைணவ திருத்தலங்களில் ஒன்றானதும், புராதானமிக்க அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ யோகநரசிம்மர், ஸ்ரீவரதராஜசுவாமி, திருமழிசையாழ்வார், கருடாழ்வார் மற்றும் குளக்கரை ஆஞ்சநேயர் ஆகிய சன்னதிகளுக்கும், அதன் விமானங்களுக்கும், பின்கோபுர வாசல் விமானம், பாண்டி கோபுரம், நரசிம்மர் கல்யாணமண்டபம், நரசிம்மர் மண்டபத்தின் மேல்தளம், கீழ்தளங்கள், குளக்கரை ஆஞ்சநேயர் விமானம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் திருப்பணிகள் 10.07.2016 அன்று துவங்கப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, துன்முகி வருடம் ஆவணி மாதம் 2ம் தேதி (18.08.2016) மாலை யாகசாலை துவங்கப்பட்டு ஆவணி மாதம் 6ம் தேதி (22.08.2016) மஹாசம்ரோக்ஷணம் நடைபெறவுள்ளது. இத்திருப்பணிகள் பழமை மாறாமல் தொல்லியல் துறை வல்லுநர்களின் ஆலோசனைப்படி, 95 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில் ரூ.55 இலட்சம் மதிப்பில் சுவாமி கிரீடம், கர்ணபத்திரம், ஸ்ரீசடகோபம், கவசங்களுக்கு தங்கரேக் பதிக்கும் பணியும், கோபுர கலசங்களுக்கு தங்கநீர் தோய்க்கும் பணியும் மற்றும் முதல் முறையாக 1ஸ்ரீநரசிம்மஸ்வாமிக்கு சொர்ணபந்தனமும், ஸ்ரீகஜேந்திரவரதராஜஸ்வாமிக்கு ரஜத பந்தனமும் பொருத்தப்படவுள்ளது. மேலும் காவல்துறை, சென்னை மாநகராட்சி, தீயணைப்புத்துறை, சுகாதாரத்துறை ஆகியோருடன் இணைந்து பாதுகாப்பு 1பணிகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.1

மேற்கண்ட திருப்பணிகள் குறித்து இன்று (11.08.2016) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேவூர் திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முகமணி அவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் நடைபெற்று வரும் ஏற்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9